ARAN International e-Journal of Tamil Research

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

(Peer Reviewed Journal Multidisciplinary)

ISSN: 2582-399X



**காலாண்டு இதழ்**
**(ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர்)**
**ஆகிய மாதங்களில் வெளிவரும்**

*Vol:7 Issue :28 October 2025*

கோட்டை:7 வாயில்:28 அக்டோபர் 2025

அரண்

Aran

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

International e Journal of Tamil Research


# EDITORIAL BOARD

Founder / Editor in Chief

**Dr PRIYAKRISHNAN**

Publisher

**MR P. JAYAKRISHNAN**

Editorial Board Members

**Dr V SELVAKUMAR**

Professor And Head of The Department of Maritime History and Marine Archaeology Tamil University, Thanjavur, TamilNadu, India selvakumar.v@tamiluniversity.ac.in

**Dr. S. KAVITHA**

School of Indian Languages and Comparative Literature,Tamil University, Thanjavur. TamilNadu, India

**Dr.K.DAYANIDHI**

Assistant Professor & Head i/c , Department of Vaishnavism , University of Madras, TamilNadu, India. dayanidhi@unom.ac.in

**Dr O.MUTHIAH**

Professor of Tamil, The Gandhigram Rural Institute (Deemed to be University) Gandhigram - 624 302 Dindigul District, TAMIL NADU

**DR UMADEVI**

Professor In Tamil, Department of Modern Indian Languages And Literery Studies University of Delhi,Delhi . dumadevi@mil.du.ac.in


Copy Right @ Aran international e journal of Tamil Research/Dr. Priyakrishnan

அரண்

Aran

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

International e Journal of Tamil Research

# EDITORIAL BOARD

**DR JAGADEESAN.T.**

Assistant Professor of Tamil, Department of Indian Languages,
Faculty of Arts, Banaras Hindu University,
Varanasi- 221005, Uttar Pradesh,India.

**DR SENTHIL PRAKASH.S**

Teacher – in- charge/Assistant professor (SG),Department of
Tamil, Institute of Languages, Literature& culture,
Visva – Bharathi University,Santiniketan,West
Bengal, India -731235

**DR R TAMILSELVAN**

Assistant professor, Aligarh Muslim University, Uttar Pradesh,India-202002

**Dr SWARNAVEL ESWARAN**

Associate Professor Departments of English, and Media and Information
Michigan State University. USA. eswaran@msu.edu

**Dr (Ms.) NILANKA LIYANAGE**

Senior Lecturer in Dance ,Department of Dance,Drame&Theatre Arts,
Swamy Vipulananda Institute of Aesthetic Stidies,Eastern University Srilanka

**Mrs THULSIVANTHANA UDAYASHANKAR**

Senior lecturer Gr II in English, Swamy Vipulananda Institute of
Aesthetic Stidies ,Eastern University, Srilanka

# அரண் Aran

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

*International e Journal of Tamil Research*



## EDITORIAL BOARD

**Dr B. DHANANJAYAN**

Associate Professor, Sir Theagaraya College, Old Washermenpet, Chennai - 600 021.

**Dr P.SEKAR**

Assistant Professor,Department of Education,Govt.Institute of Advanced Study in Education,Saidapet,Chennai-600015.sekar@iasetamilnadu.ac.in

நிறுவனர்/பதிப்பாளர்/நிர்வாக ஆசிரியர்

இதழாக்கம்

திரு ப. ஜெயகிருஷ்ணன்

முதன்மை ஆசிரியர்

முனைவர் பிரியாகிருஷ்ணன்

*+917299587879*

www.aranejournal.com

aranjournal@gmail.com


அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழில் வெளிவரும் ஆய்வுக்கட்டுரைகள் அனைத்தும் (Peer Review)பீர் ரிவியூ செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

# அகத்தினுள்


**ஐங்குறுநூறு 'சிறுவெண் காக்கைப் பத்து' பாடல்களில் எடுத்துரைப்புச் சிறப்புகள் மற்றும் நுட்பங்கள்**
முனைவர் நா.ஜானகிராமன்1, முனைவர் பெ.தனலட்சுமி2

**குறுந்தொகையை தழுவிய இக்கால படைப்புகளில் இலக்கியநயம்**
மெ.பேபி நிஷாந்தினி

**பட்டினப்பாலையில் பழந்தமிழரின் கடற்பயணத்தில் மரக்கலங்கள்**
ப.ராம்குமார்

**புறநானூற்றில் உயிரியல் செய்திகள்**
எம்ஜிராமச்சந்திரன். வெ

**புறநானூற்றில் தமிழர் பண்பாடு**
திருமதி கா.சுகன்யா,

**செவ்வியல் இலக்கியங்களில் இல்லறத்தில் தாயின் பங்களிப்பு**
இரா.சினேகலதா

**திருக்குறளில் உழவும் உண்மைநிலையும்**
முனைவர் இரா.ஜெய்சங்கர்

**திருக்குறளில் மருத்துவச் செய்திகள்**
முனைவர் சல்மா மஹஜபீன் த. மு

**திருக்குற்றாலக் குறவஞ்சியில் குறத்தியின் குறிசொல்லும் பான்மை**
க.நித்தியா

**அபிராமி அந்தாதி - ஒரு பார்வை**
சா.கஸ்தூரி

**வேட்டுவர்களின் பண்பாட்டு சார்ந்த மரபுகள் — சிலப்பதிகாரம்**
முனைவர் த. சுபஜா

**வைணவ உரைச் சக்ரவர்த்தி பெரியவாச்சான் பிள்ளை**
முனைவர்ப.தனஞ்செயன்

**தெய்வங்களும் கோவில்களும்**
அ.அறிவுக்கொடி

**பெரும்பண்ணையூர், சிமிழி, புதுக்குடி கிராம மக்களின் சிறுதெய்வ வழிபாட்டில் மக்கட்பேறு சடங்குப் பின்புலம்**
க.கார்த்திகா



அட்டைப்படம் உதவி
இணையம்

நன்றி

# அகத்தினுள்


பாம்பாட்டிச் சித்தர் பாடல்களில் சமுதாயச் சிந்தனைகள்
முனைவர். க.விமலா

திருக்குர்ஆன் கூறும் மாந்தர் ஒழுக்கங்கள்
அ.ஷமீலா பேகம்

ஜோ டி குரூஸின் யாத்திரை புதினத்தில் சிறுவனின் தேடல்கள்: கத்தோலிக்கம் மற்றும் பூர்வீக நம்பிக்கைகளின் புரிதல்கள்
முனைவர் தா. இரா.ஹெப்சிபா பியூலா சுகந்தி

கூகை புதினத்தில் கையாளப்பட்டுள்ள உத்தி முறைகள்
இரா.ராஜேஷ் குமார்

எஸ்.இராமகிருஷ்ணனின் மூன்று அற்புதங்கள் சிறுகதையில் தெக்கனின் பாத்திரப்படைப்பு
ஜெ.சர்மிளா

தோட்டியின் மகன் நாவலில் மக்களின் உணர்வுகளும் போராட்டங்களும் முனைவர் வ.மீனாட்சி

கூளமாதாரி புதினத்தில் தலித்தியம்
வீ. சவிதா

வெளவால் தேசத்தில் இயற்கை சூழல்
மு.ஹரிதேவி

சோ. தர்மனின் சூல் நாவலில் பழமொழிகள்
மு.கோமதி

சோ. தர்மனின் 'சூல்' நாவலில் உவமைகள்
இ.ராபர்ட் கென்னடி

மலையகத்தமிழரும் அகதி வாழ்வும்
வேளாங்கன்னி.ஏ

அண்மைய நாவல்களில் மீனவர்களின் பண்பாட்டியல்
முனைவர் ந. இரத்தினக்குமார்

கே.பி கறுப்பனின் பெண்ணியச் சிந்தைனகள்
தனிஜா த. பெ



அட்டைப்படம் உதவி
இணையம்

நன்றி

# அகத்தினுள்

பொதிகைமலையின் ஆயண்டிரன்
முனைவர் த. முத்துலட்சுமி

பாண்டிய நாட்டுத் துறைமுகங்கள்
கி.தமிழரசி

பழந்தமிழர்களின் வாழ்வியலில் மலர்ப் பயன்பாடு ஒரு பார்வை
முதுமுனைவர் பிரியாகிருஷ்ணன்

வாய்மொழிப் பாடல்களில் பஞ்சகாலக் குறிப்புகள்
ம.கலைச்செல்வன்

இலக்கியங்களும் பசிப்பிணியும்
முனைவர் ப. மணிகண்டன்

அறிவியல் நுட்பங்களும் இலக்கிய செழுமையும்
முனைவர் அ.புஷ்பா

கணினித்தமிழ் வளர்ச்சியில் இணைய நூலகங்கள்
கு.நிவேதா

மொழி வளர்ச்சியில் ஊடகத்தின் பங்கு
முனைவர் ஈ இசக்கியம்மாள்

*1.The Predicament of Women in Patriarchal Society in Anita Nair's The Better Man*
**K. Nesapriya**

திரைப்படக் கதைசொல்லலும் சமூகத் தாக்கமும்: அசுரன் திரைப்படம்.
(திரைப்படக் கோட்பாடுகள், தொழில்நுட்ப அழகியல் மற்றும் பார்வையாளர் வரவேற்பு)
திரு. விசுமாப்போடி சசிகரன்

பாலக்காடு மாவட்டத்தில் சுமை தாங்கி
முனைவர் வே.இரவி

கீழடி அகழாய்வு - தமிழரின் தொன்மையான வரலாற்று பின்புலம்
முனைவர் அ. மதலேன்

சம்புவராயர் கல்வெட்டுகளில் அறியலாகும் நாடும் ஊரும்
முனைவர்அ. அமுல்ராஜ்

பரதநாட்டியத்தில் நால்வகை விருத்தியின் வகிபங்கு
கலாநிதி தாக்ஷாயினி பரமதேவன்

அட்டைப்படம் உதவி
இணையம்

நன்றி

# தமிழ்

# *An Analytical Study of the Five Elements and Sensory Principles in Siddhar Songs*

***Dr. K.Vimala,*** *Assistant Professor,Department Of Tamil, Dr. Sns Rajalakshmi College Of Arts And Science (Autonomous), Coimbatore-49*

***Abstract:***

*The songs of the Siddhars are profound philosophical works that express spiritual wisdom, natural science, human physiology, and the mysteries of the universe. The Siddhars state that the five great elements (Pancha Bhoothas) are closely connected with the human body. The stability of the body is attributed to earth, the flow of blood to water, body heat to fire, respiration to air, and consciousness to space. Through these associations, the Siddhars emphasize the philosophy that man and the universe are one. Furthermore, they explain that the five senses - eyes, ears, nose, tongue, and skin- govern the functioning of the mind, and that by controlling the senses, one can attain spiritual enlightenment. Thus, this study aims to explore the interrelationship between the five elements and the five senses as reflected in the songs of the Siddhars.*

***Key Words:*** *Five Senses, Five Elements, Universe, Sense Organs, Wisdom*

# சித்தர் பாடல்களில் பஞ்சபூதங்களும் ஐம்புலத்தன்மையும்

**முனைவர். க.விமலா,** உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, டாக்டர் எஸ்.என்.எஸ். இராஜலட்சுமி கலை மற்றும் அறிவியல் கல்லூரி (தன்னாட்சி), கோயம்புத்தூர் - 49.

**ஆய்வுச் சுருக்கம்:**

சித்தர் பாடல்கள் ஆன்மீக ஞானம் இயற்கை அறிவியல், உடலியல் மற்றும் பிரபஞ்ச இரகசியங்களை விளக்கும் ஆழ்ந்த தத்துவ நூல்கள் ஆகும். இவற்றில் பஞ்சபூதங்கள் மனித உடலுடன் இணைந்தவை என சித்தர்கள் கூறுகின்றனர். உடலின் நிலைத்தன்மை நிலத்தாலும், இரத்த ஓட்டம் நீராலும், உடல் வெப்பம் தீயாலும், சுவாசம் காற்றாகவும், அறிவு ஆகாயமாகவும் அறியப்படுகின்றன. இதன்வழி மனிதனும் பிரபஞ்சமும் ஒன்றென்னும் தத்துவத்தை சித்தர்கள் வலியுறுத்தினர். அதுமட்டுமின்றி, ஐம்புலங்களான கண், காது, மூக்கு, நாக்கு, தோல் ஆகியவை புலன்களின் அடிப்படையில் மனம் எவ்வாறு இயங்குகிறது

என்பதையும் புலன்களை அடக்கினால் ஆன்ம ஞானம் பெறலாம் எனவும் போதித்தனர். இவ்வாறாக சித்தர் பாடல்களில்வழி பஞ்ச பூதங்கள் மற்றும் ஐம்புலங்களின் உறவு குறித்த செய்திகளை ஆராய்வதே இங்கு நோக்கமாக அமைகின்றது.

**திறவுச் சொற்கள்:** ஐம்புலன்கள், பஞ்சபூதங்கள், பிரபஞ்சம், ஞானம், ஞானேந்திரியங்கள்

**முன்னுரை:**

உலகில் தோன்றிய ஒவ்வொரு உயிரினமும் தத்தம் உணர்வுகளை புலன் உறுப்புகள் வழியாக வெளிப்படுத்துகின்றன. அவை தோல், செவி, கண், மூக்கு, நாக்கு என்பன. இவை புறத்தே உள்ள ஊறு, ஓசை, ஒளி, மணம், சுவை என்னும் உணர்வுகளை அறிவதற்குக் காரணமாக அமைவதால் ஞானேந்திரியங்கள் எனப்பட்டன. இவை தமிழில் அறிகருவிகள் என்றும் ஐம்பொறிகள் என்றும் அழைக்கப்படுகின்றன. ஐம்பெரும் பூதங்கள் குறித்து அறிவதற்கு முன் தன்மாத்திரைகள் பற்றி அறி;ந்திருக்க வேண்டும். தன்மாத்திரை என்ற சொல்லுக்கு அதனளவில் நிற்பது என்று பொருள். ஐம்பொறிகள் வழி வெளிப்படும் உணர்வுகளின் வாயிலாக பூதங்கள் தோன்றும். இவை ஒவ்வொன்றும் அதனதன் பொதுநிலையிலே அறியப்படுகின்றன. (ஓசை - வல்லோசை என்றோ, மெல்லோசை எனப் பாகுபாடின்றி அறியப்படுதல். சுவை - இனிப்பு, புளிப்பு எனப் பாகுபாடின்றி பொது நிலையிலே அறியப்படுதல்). சித்தர்கள் தத்தம் பாடல்களின் வழி பஞ்சபூதங்கள் மற்றும் ஐம்பொறிகள் சார்ந்த கருத்துகளையும், சிந்தனைகளையும் எடுத்தியம்புகின்றனர். அதன் வழி வெளிப்படும் கருத்துகளை இங்கு காண்போம்.

**சித்தர்கள் - விளக்கம்**

தனிமனிதன், மனிதமனம், உடம்பு பற்றி பெரியதொரு ஆய்வை நிகழ்த்தியவர்கள் சித்தர்கள். சித்து (அ) சித் என்றால் அறிவு. தன்னை அறிவு வடிவமாக ஆக்கிக் கொண்டவர்கள் சித்தர்கள். தெய்வ வழிபாடுகள் தமிழகத்தில் நிறைந்து விளங்கிய காலத்தில் மனித மனம்தான் எல்லாம் என்று ஆராய்ந்தவர்கள் சித்தர்கள். இவர்களை அறிவர் எனத் தொல்காப்பியம் குறிப்பிடுகின்றது.

இதனை,

“மறுவில் செய்தி மூவகைக் காலமும்

நேறியின் ஆற்றிய அறிவன் தேயம்”

(தொல்: பொ:புறம் - 74)

எனும் வரிகளில் அறிவன் என்னும் சொல்லுக்கு உரையாசிரியர்கள் பல்வேறு பொருள்களைக் கூறியுள்ளனர். இளம்பூரணர் அறிவன் என்பதற்கு கணியன் (சோதிடன்) எனவும், நச்சினாரக்கினியர் அறிவன் எனும் சொல்லுக்கு ஆழ்ந்த பொருளில் தத்துவ நோக்குடனும், புலமையுடனும் உரை வழங்குகின்றார். அஃதாவது முக்காலமும் அறிந்து யோகிகளாய், உபாயங்களை அறிந்து உணர்ந்தவர்கள் எனக் குறிப்பிடுகின்றார். சங்ககாலத்திற்கு முற்பட்ட அகத்தியரும், பிற்பட்ட திருமூலரும் அறிவர் எனும் சொல்லாலே குறிக்கப்பட்டதாக செய்திகள் அறியப்படுகின்றன.

திருமூலர் உள்ளிட்ட பதிணெண் சித்தர்கள் பலவாறாக ஆய்வுகளைச் செய்துள்ளனர். பேரறிவுப் பொருளாக விளங்கும் சிவத்தைத் தானே அது, அதுவே தான் எனக் கண்டு அதுவாகவே ஆகியோர் சித்தர் பெருமக்கள்.

திருமூலர் தமது திருமந்திரத்தில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

இதனை,

“சித்தர் சிவசித்தைக் கண்டவர், சீருடன் (2526)

சித்தர் சிவலோகம் இங்கே தெரிசித்தோர் (125)

சித்தஞ் சிவமாய் மலமூன்றும் செற்றவர்

சுத்தச் சிவமாவர் தோயர் மலபந்தம் (2922)

(பேராசிரியர். புலவர்.அ. மாணிக்கம், திருமந்திரம் மூலமும், தெளிவுரையும், தொகுதி 1,3)

எனும் பாடல் வரிகளின் வழி, சித்தை என்ற சொல்லுக்கு தன்னை உணர்தல், வெற்றி, விடுதலை, இறுதி விடுதலை எனப் பொருள் தருகின்றது. சித்தர்கள் அகன்று பரந்த சிவத்தைக் கண்டவர்கள், சிவசிந்தனையில் நின்றவர்கள் எனவும், சிவலோகத்தில் அடையத்தக்க பேரின்பத்தை சமாதி நிலையிலே பெறுபவர்கள் எனவும் அறியப்படுகின்றது. மேலும், திருமந்திரம் சிவகதிக்கு வித்துமாய்ச் சிவமாய், இருப்பதோடு. மூவகை மலங்களையும் வென்றவர் என்பதையும் விளக்குகின்றது.

(பதி, பசு, பாசம் பெயர் வழக்கு: ஆணவம், கன்மம், மாயை ஆகியவை பாசம் என்னும் பெயரைப் பெறுகின்றது. இவற்றால் கட்டுண்டு கிடக்கும் உயிர் பசு என்னும் பெயரைப் பெறுகின்றது. இருள் வடிவமான ஆணவமும், பிறவித் துன்பத்தை தரக்கூடிய கன்மமும் (வினை), மயக்கத்தை தரக்கூடிய மாயையும் ஆகிய இம்மூன்று மலக்கட்டினிலிருந்து பசுக்களாகிய

உயிர்களை விடுவித்துக் காப்பவனாகிய இறைவன் பதி எனப் போற்றப்படுகின்றான்.) (மலம் - குற்றம்)

**சித்தர் பாடல்களில் ஐம்புலப் பலன்கள்**

சித்தர் பாடல்கள் வாழ்க்கைக்குத் தேவையான பல்வேறு கொள்கைகளையும், சிந்தனைகளையும் அளித்துள்ளது. இச்சித்தர் பாடல்கள் தொகுக்கப்பட்ட காலம் இருபதாம் நூற்றாண்டு ஆகும். மனித துன்பத்திற்குக் அடிப்படைக் காரணம் ஆசை. மனித மனமே இன்ப, துன்பத்திற்கு காரணமாக அமைகின்றது. மனத்தினை ஆசை வழி அழைப்பவை ஐம்புலன்கள். ஆசைக்கும், இன்ப துன்பத்திற்கும் காரணமான ஐம்புலன்கள் குறித்து சித்தர்களின் அறிவின்பால் அறிவியல் உலகிற்கு அளித்துள்ள சிந்தனைகளை பாடல்களின் வழி காண்போம்.

ஐம்புலன்களையும், பொறிகளையும் ஆராய்ந்து பிரபஞ்சத்தோடு இயைபுப் படுத்திக் காட்டுவர். ஐம்புலன்களை வென்றவனே வீரன். கடவுள் ஒருவரே எனத் தெளிந்த அறிவே பேரறிவாகும். மனிதன் பிரபஞ்சத்தில் அடக்கம். பிரபஞ்சத்தில் மனிதன் அடக்கம். அப்பிரபஞ்சத்தை மனிதன் கட்டுக்குள் வைக்க ஐம்புலன்கள் கட்டுக்குள் அடங்கும்.

இதனை சைவ சித்தாந்தம்,

“ஐம்புலன் வென்றவன் வீரமே வீரம். கடவுள்
ஒன்றெனத் தெளிந்த பேரறிவே அறிவு…
பிரபஞ்சத்தில் மனிதன் அடக்கம்.
மனிதனில் பிரபஞ்சம் அடக்கம்”

(சைவ சித்தாந்தம் வினா விடை, சண்முக தேசிக — பரமாசாரிய சுவாமிகள் ஸ்ரீலஸ்ரீ, ப.22)

எனும் பகுதி வழி, ஐம்புலன்களை கட்டுக்குள் வைக்கும்போது பிரபஞ்சம் அவனுள் அடங்கும் என்பதை அறிய முடிகின்றது.

இதே கருத்தினை வலியுறுத்தும் நோக்கில் ஞானக்கோவை என்னும் நூலில் ஔவையார் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

“தன்னை அறியும் அறிவுதனைப் பெறில்
பின்னைப் பிறப்பில்லை வீடு.”

(ஞானக்கோவை, ஔவையார் குறள் 4)

எனும் அடிகள் வழி, தன்னை அறிந்துக் கொள்கின்ற அறிவுதனைப் ஒருவன் பெற்றுவிட்டால் மீண்டும் பிறப்பு என்பதே இல்லை என்பதை உணர முடிகின்றது.

ஐம்பொறிகளில் ஒன்றான மனமானது இவ்வுலகிலுள்ள இன்ப, துன்ப வாழ்க்கையிலிருந்து விடுபடுவதை மானிடப் பிறவியின் நோக்கமாக கொள்ள வேண்டும் என்பதை

"பூட்டைத் திறப்பமுங் கையா லேமனப்

பூட்டைத் திறப்பது மெய்யாலே"

(ஔவையார் ஞானக்கோவை, ஞானக்குழி 43).

எனும் இவ்வடிகள் வழி சித்தர்கள் உணர்த்தியுள்ளனர்.

சித்தர்களில் சிறந்தவராக போற்றப்படும் திருமூலர் மனிதனது உடல் பற்றியும், உள்ளம் பற்றியும் இவர் ஆழ்ந்து ஆராய்ந்து திருமந்திரம் என்னும் புராணத்தை தந்துள்ளார். அதில் உடம்பின் வகைப்பாடுகள் குறித்தும் அதன் நிலைப்பாடு குறித்தும் பல்வேறு கருத்துகளைப் பதிவு செய்துள்ளார்.

மாயமாகிய இவ்வுடம்பு இரண்டு வகைப்படும். ஒன்று, இறைவன் பிறப்பளித்த பிறப்புடன்பு. இவ்வுடம்புக்கு காரணம் மலஆற்றல் மட்டுமே ஆகும். மல ஆற்றலை அகற்றும் பொருட்டுக் கண், கை முதலிய கருவிகளுடன் (பொறிகள்) கூடிய புறத்தொழிலுக்கு ஏற்றவாறு அமைத்துக் கொடுப்பது சிற்றுடம்பு. பிறப்புடம்மை நுண்ணுடம்பு (சூக்கும சரீரம்) என்றும் சிறப்புடம்பைப் பருஉடம்பு (தூல சரீரம்) என்றும் திருமந்திரம் கூறுகிறது.

நுண்ணுடம்பு அழியாதது என்பதனை,

"அத்தன் அமைத்த உடலிரு கூறினில்

சுத்தம தாகிய சூக்குமஞ் சொல்லுங்கால்

சுத்த பரிச உருவ ரசகந்தம்

புத்திமா னாங்காரம் புரியட்ட காயமே". (2090)

(டாக்டர் இராசு. வசந்தகுமார், திருமந்திரம் பத்தாம் திருமுறை ப.373)

பருவுடலின் அமைப்புக் குறித்து,

"இரதம் உதிரம் இறைச்சி தோல் மேதை

மருவிய அத்தி வழும்பொடு மச்சை

பரவிய சுக்கிலம் பாழாம் உபாதி

உருவ மாலால், உடல்ஒன்று எனல் ஆமே. (2125)

(பேராசிரியர். புலவர்.அ. மாணிக்கம், திருமந்திரம் மூலமும், தெளிவுரையும், தொகுதி 2, ப.772).

எனும் பாடலின்வழி, இவ்வுடம்பானது, உணவிலிருந்து பெறப்படும் ஆற்றல், இரத்தம், தோல், நரம்புடன்; பொருந்திய எலும்பு, கொழுப்பு மற்றும் திரவம் பொருந்திய மூளை என்பவற்றால் ஆனது. அழிந்துவிடும் தன்மையுடைய இதனை ஒரு பொருள் (காரியம்) என்று சொல்ல முடியாது எனும் கருத்தை இயம்புகின்றது.

இதன்வழி உடம்பானது இருவகைப்படும் எனவும், ஆற்றல் (சூக்குமம்) நிறைந்த உடம்பை நுண்ணுடம்பு எனவும், ஆற்றலைத் தாங்கி நிற்கின்ற சரீரத்தை பரு உடம்பு என குறிப்பிடுகின்றது. இவ்வுடம்பினுள் பஞ்சபூதங்கள் என அறியப்படும் ஓசை, ஊறு, ஒளி, சுவை, நாற்றம் என்னும் ஐந்தும் தன்மாத்திரை (அதனளவில் நிற்பது) அளவில் நிற்கிறது. பரு உடம்பில் காணப்படும் பொறிகள் (கண், காது, மூக்கு, வாய், தோல்) வெளியே தெரிபவை. நுண்ணுடம்பு அழியாதது எனவும் பருஉடம்பு அழியக்கூடியது என்பதையும் அறிய முடிகின்றது.

திருமந்திரத்தில் எட்டாம் தந்திரம் முழுவதும் மனிதனுடைய பொறிகள், புலன்கள் மனம் பற்றிய அமைப்புகளைப் பற்றி ஆராய்வதாகும். இவற்றை ஆராய்ந்த திருமூலரின் இறுதி அறிவுறுத்தல் மனிதன் பூரணத்துவ (முழுமை) நிலையை அடைதலே இறையை அடைவதாகும். ஐம்புலன்களை அடக்கி, அறிவு என்னும் ஞானத்தீபம் ஏற்றி உடம்பை நீங்கி ஒளியாகிய இறைவனை அடைவதற்குரிய பாதை எளிதாகும்.

இதனை,

"ஆனைகள் ஐந்தும் அடக்கி அறிவென்னும்

ஞானத் திரியைக் கொளுவி அதனுட்புக்கு

ஊனை இருளற நோக்கு ஒருவற்கு

வானக மேற வழிஎளி தாகுமே". (2282)

(டாக்டர் இராச. வசந்தகுமார், திருமந்திரம் பத்தாம் திருமுறை (III), ப.551)

எனும் பாடலின்வழி, புலன்களை அடக்கி, அறிவாகிய ஞானத்திரியை ஏற்றி, ஊனாகிய உடம்பை நீக்கிவிட்டு ஒளியாகிய இறைவனை அடைய பாதை எளிதாகும் என்பதை உணர்த்துகின்றது.

**சித்தர் பாடல்களுள் பஞ்சபூதங்களும் ஐம்புலத்தன்மையும்**

சித்தர் பெருமக்கள் தமது பாடல்கள் வழி மனிதன் நற்சிந்தனையோடு வாழவும் இறைவனது பாதம் சேரவும் பலவகை வழிமுறைகளை எடுத்துக் கூறியுள்ளனர். மனிதன் உடலையே தான் என எண்ணிக்கொண்டு வாழ்ந்து இறுதியில் முடிவை அடைகின்றான். இறந்த பிறகு மீண்டும் பூமியில் பிறக்கின்றான். உடல் என்பது மாறுதலோடு கூடிய ஒரு நிலையாகும். இறந்த பிறகு அடையும் நிலையைத் தேடுவதைவிட உயிர் உடலில் உள்ளபோதே தேட வேண்டும் அதுவே உடலின் பயனாகும் என எடுத்துரைக்கின்றனர்.

பஞ்சபூதங்களின் நிலைப்பாட்டைக் குறித்து சித்தர்கள் பலவாறு கூறியுள்ளனர். பதினெண் சித்தர்களில் ஒருவரான சட்டைநாதர் பஞ்சபூதங்கள் குறித்து குறிப்பிடுவதை சித்தர் பெருமக்களின் சீரிய சிந்தனைகள் குறிப்பிடுகின்றது.

பஞ்சபூதங்கள் ஒன்றுக்கொன்று பகைமை கொள்கின்ற போது அவை ஒன்றையொன்று அழிவைச் சந்திக்கின்றன. அதுபோல மனிதன் தனது உடலையே பெரிதாக எண்ணிக் கொண்டு வாழ்ந்து இறுதியில் முடிவை சந்திக்கிறான். மீண்டும் பிறக்கின்றான். ஆதலால் இறந்தபின் தேடும் நன்மையை உயிர் உள்ளபோதே தேட வேண்டும். இதனை வலியுறுத்தும் நோக்கில்,

"வானம், காற்று, நெருப்பு, தண்ணீர், மண் ஆகிய
ஐந்தும் ஒன்றுக்கொன்று பகைமை ஆகின்றன.
அதன் காரணமாக வானத்தை காற்று மூடுகின்றது.
காற்று நெருப்பை எரிய விடுகின்றது. ஆனால் தண்ணீரோ
அந்த நெருப்பை அணைத்து விடுகிறது. இந்தத்
தண்ணீரை மண் உண்டு விடுகிறது".

" இந்த இயற்கையின் திருவிளையாடல்களைக் கொஞ்சம்
உற்று நோக்கிப் பார்த்தாலே போதும். பரமண்டலத்தின்
தோற்றமாகிய, தோற்றத்தின் உற்பத்தியாகிய

நீர், நிலம், காற்று, ஆகாயம், நெருப்பு என்ற

ஐந்தும் அதனதன்படி அழிவை சந்திக்கின்றது என்று

நமக்கெல்லாம் எடுத்துரைக்கின்றார்'';.

(கே.எம்.நாச்சிமுத்து, சித்தர் பெருமக்களின் சீரிய சிந்தனைகள், ப.78)

எனும் பகுதி வழி, பூதங்கள் ஒவ்வொன்றும் ஒன்றையொன்று விழுங்கி எவ்வாறு முடிவுறுகின்றதோ, அவ்விதமே உடம்பின் முடிவும் முடிவுறும். ஏனில் உடம்பு நிலையில்லாதது என்பதை உணர்த்தி நிற்கின்றது.

சித்தர் பாடல்களில் புலன்களைக் குறிக்க புலன், பொறி, கரணம், இந்திரியம் போன்ற சொற்கள் பயன்படுத்தப்படுகின்றன. ஐம்பொறிகளில் முதல் நிலையில் அமைவது (மெய்-உடம்பு) தொட்டு உணரும் அறிவான ஊறு அல்லது ஸ்பரிசம் (தொடுதல்). சித்தர் கருத்துப்படி உடம்பு இறைவனை வணங்கும் கருவியாக அமைதல் வேண்டும். நாவின் வேலை இறைவனைப் பாடுவதும், ஐந்தெழுத்து மந்திரமான சிவாய நம என்பதை ஓதுவதுமாக அமைதல் வேண்டும். இடைக்காடார் தமது பாடல்களில் மௌனம் என்பது தியானத்திற்கு அடிப்படை எனும் பொருளில் அமைத்துள்ளார்.

இதனை,

''வாய் பேசா திருந்து பெருநிட்டை சாரெங்கள் கோனே'' 123

எனவும்,

''மூகைபோலிருந்து மோனத்தைச் சாதியெங்கோனே 130

(டாக்டர். சி.எஸ். முருகேசன், சித்தர் பாடல்கள் (பெரிய ஞானக்கோவை), ப.227)

எனும் வரிகள் மௌனமாய் இருந்து இறைவனைப் பாடுவதும், ஐந்தெழுத்து மந்திரத்தை பாடுவதுமாக இருத்தல் தியானத்திற்கு அடிப்படையானது எனும் செய்தியை அறிய முடிகிறது. இவ்வாறாக, சித்தர் பாடல்களின்வழி ஐம்பூதங்களின் தன்மை, ஐம்புலன்களின் தன்மை குறித்த செய்திகள் பெறப்படுகின்றன.

சித்தர்களின் கருத்துப்படி, நமது உடல் ஐம்;பூதங்களால் ஆனது. மனிதன் இறந்து விடும் நிலையில் ஐம்பூதங்களும் வெவ்வேறாக பிரிந்து போகும்.

இதனை,

நிலம் - எலும்பு, சதை, நரம்பு, தோல், மயிர்

நீர் - தண்ணீர், இரத்தம், விந்து, வியர்வை, கழிவு

தீ - பசி, தாகம், தூக்கம், அழகு, சோம்பல்

காற்று — சுருக்கம், விரிவு, அசைவு

ஆகாயம் - வயிறு, இருதயம், கழுத்து, தலை

(மருத்துவர்.கோ.செல்வமூர்த்தி, அறியப்படாத தழிழ் மருத்துவ வரலாறு, ப.9)

எனும் பகுதிவழி, நமது உடலானது ஐம்பூதங்களால் ஆனது என்பதை வெளிப்படுத்துகின்றது. மனிதன் இறந்த பிறகு அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு பூதங்களோடு பிரிகின்றது. இவ்வாறாக, சித்தர் பாடல்களின்வழி பஞ்சபூதங்களின் தன்மை, ஐம்புலன்களின் தன்மை பற்றி எடுத்துரைக்கின்றன.

**சான்றோர் கருத்துகள்:**

ஐம்பூதங்கள் ஒவ்வொன்றும் உடலோடு தொடர்புபடுத்தி அறியப்படுகின்றன. இதனை,

“ஐம்பூதங்களாவன: ஆகாயம், காற்று, அக்னி, நீர், பூமி என்பனவாகும்.உலகம் முதல் அத்தனைப் பொருட்களும் இப்பூதங்களின்சேர்க்கையால் உண்டானவைதாம். இப்பூதங்களுள் ஆகாயம் மனித உயிராக நிற்கின்றது. பூமி மனித உடலாக நின்றது. ஜீவராசிகள் அத்தனையும் உயிரும் உடலும் கொண்டவைதாம். மனித உடலும் அப்படித்தான். உயிர்-ஆகாயம், உடல்-பூமி, இவை இரண்டும் ஒழுங்காகச் செயல்பட மற்றைய பூதங்களான காற்று, அக்னி, நீர் ஆகிய மூன்றும் உடலுக்கும் உயிருக்கும் இடையே தொடர்பை உண்டாக்கிக் கொள்கின்றன”

(முனைவர் ந.சண்முகம், வாத்ஸல்ய பாவம், ப.11)

எனும் பகுதிவழி, ஆகாயம் உயிருடனும், பூமி உடலுடனும் தொடர்புபடுத்தப்படுகின்றது. இவை இரண்டும் ஒழுங்காகச் செயல்பட மற்ற பூதங்களான காற்று, அக்னி, நீர் ஆகிய மூன்றும் தொடர்பை ஏற்படுத்திக் கொள்கின்றன என்பதை அறிய முடிகின்றது.

உலகில் படைக்கப்பட்ட ஒவ்வொன்றும் மனிதருள்ளும் இருக்கின்றது. அண்டத்தில் ஏற்படுகின்ற ஒவ்வொரு மாற்றமும் பிண்டமாகிய உடலினுள்ளும் ஏற்படுகின்றது. அண்டம் வேறல்ல, பிண்டம் வேறல்ல இரண்டும் ஒன்றே என்பதனை,

“அண்டத்திலுள்ளதே பிண்டம்

பிண்டத்திலுள்ளதே அண்டம்

அண்டமும் பிண்டமும் ஒன்றே

அறிந்து தான் பார்க்கும் போதே” (சட்டமுனி நிகண்டு)

(மருத்துவர்.கோ.செல்வமூர்த்தி, அறியப்படாத தழிழ் மருத்துவ வரலாறு, ப.9)

எனும் பாடல் விளக்குகின்றது. உலகத்திலுள்ள அனைத்தும் மனிதனுள்ளும் இருக்கின்றது. அண்டத்தில் ஏற்படுகின்ற ஒவ்வொரு மாற்றமும் அதன் கூறாகிய மனித உடம்பினுள்ளும் பிரதிபலிக்கின்றது. அதனை உணர்ந்து அதற்கேற்றாற்போல் வைத்தியமும் அமைய வேண்டும். உடல், மனம், ஆன்மா எனும் முக்குற்ற கொள்கையை அடிப்படையாகக் கொண்டே சித்த மருத்துவத்தில் மருத்துவம் அமைகின்றது என்பதை உணர முடிகின்றது.

நிலையில்லாத இவ்வுடம்பு இறைவனை நினைத்து வாழவும், அவரே கதி என்னும் நிலையைக் கொள்ள வேண்டும் என்பதை, பாம்பாட்டிச் சித்தர் பாடல்கள் வலியுறுத்துகின்றன.

“நீரிலெழும் நீர்க்குமிழி நிலைகெ டல்போல

நில்லாதுடல் நீங்கிவிடும் நிச்சய மென்றே

பாரிற் பல உயிர்களைப் படைத்த வன்றனைப்

பற்றவேநீ பற்றித்தொடர்ந் தாடாய் பாம்பே!” 64

(சி.எஸ். முருகேசன், சித்தர் பாடல்கள் (பெரிய ஞானக்கோவை), ப.196)

எனும் பாடல் வரிகள், நீரில் தோன்றும் நீர்க்குமிழிகள் நிலையில்லாதது போன்று உடலில் இருக்கும் உயிரும் நிலையில்லாதது. ஒருநாள் உயிர் உடலை விட்டு நீங்குவது உறுதி. அதனால் நிலையில்லா உலகத்தில் இறைவனை பின்பற்றுவதே சிறந்தது எனவும், அவரே கதி எனவும் பின்பற்றி வாழ வேண்டும் எனும் கருத்தை வலியுறுத்துவதை அறிய முடிகின்றது.

**முடிவுரை:**

சித்தர் பாடல்களின் வழி சித்தர்கள் பற்றிய விளக்கம், ஐம்புலப் பலன்கள், திருமந்திரம் உணர்த்தும் பஞ்சபூதங்கள் மற்றும் ஐம்புலன்கள் அவற்றின் தன்மை ஆகியன குறித்த செய்திகள் அறியப்படுகின்றன. அதுமட்டுமின்றி புலன்கள், பூதங்கள் குறித்து சான்றோர்கள் உரைத்த செய்திகளும் பெறப்படுகின்றன. சித்தர்கள் ஐம்புலன்கள், பஞ்சபூதங்கள் ஆகிய இவ்விரண்டும் ஒருங்கிணைந்து மனித சமுதாயத்தை இயற்கைச் சக்திகளுடன் ஒருங்கிணைத்து வாழும் வழியை இயம்பியதுடன் ஆன்மீக வளர்ச்சிக்கான பாதைக்கும் வழிகாட்டியதை உணர்த்தினர். மேலும் சித்தர்கள் காட்டிய தத்துவங்கள் மற்றும் பாடல்களின் வழியாக மனிதன் இயற்கையோடு ஒத்துழைத்து வாழும் சமநிலை வாழ்க்கை நோக்கினை உணர்த்துவதை அறிய முடிகிறது.

**பார்வை நூல்கள்**

1. ஔவையார் ஞானக்கோவை, ஞானக்குழி , டாக்டர் இராச. வசந்தகுமார், திருமந்திரம் பத்தாம் திருமுறை (III), செஞ்சுடர் பதிப்பகம் அக்டோபர் 2016 கோயம்புத்தூர் - 23.
2. முனைவர் ந.சண்முகம், வாத்ஸல்ய பாவம், முதல் பதிப்பு 2016, கலைகளின் ஆய்வு நிறுவனம் கோயம்புத்தூர் - 30
3. மருத்துவர்.கோ.செல்வமூர்த்தி, அறியப்படாத தமிழ் மருத்துவ வரலாறு, அம்பத்தூர் நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் சென்னை -08
4. சண்முக தேசிக — பரமாசாரிய சுவாமிகள் ஸ்ரீலஸ்ரீ, சைவ சித்தாந்தம் வினா விடை, மூன்றாம் பதிப்பு 1972 தருமையாதினம் தருமபுரம்
5. தொல்காப்பியம், முதல் பதிப்பு 2018, இயல் பப்ளிகேஷன்ஸ் தஞ்சாவூர் 01
6. கே.எம்.நாச்சிமுத்து, சித்தர் பெருமக்களின் சீரிய சிந்தனைகள், எம் சி பவுண்டேஷன் அண்ட் லேஅவுட், செல்வபுரம் ,கோயம்புத்தூர் 26
7. பேராசிரியர். புலவர்.அ. மாணிக்கம், திருமந்திரம் மூலமும்,தெளிவுரையும்,தொகுதி 2, வர்த்தமான் பதிப்பகம் சென்னை-17
8. சி.எஸ். முருகேசன், சித்தர் பாடல்கள் (பெரிய ஞானக்கோவை) சங்கர் பதிப்பகம் சென்னை-49

*REFERENCES*

1. *Auvaiyar Jnana Kovai. Jnana Kuzhi, Dr. Rasa .Vasantha Kumar. Thirumanthiram 10th edition III, Sensudar Printers, Oct-2016, Coimbatore- 23*
2. *Dr. N. Shanmugam, Vathsalya Pavam, First Edition June 2016, Arts Research Centre, Coimbatore-30*
3. *Dr. Ko. Selvamurthy, The Unknown History of Tamil Medicine, First Edition 2017, Ambathur, New Century Book House, Chennai-08*
4. *Sri La Sri Shanmuga Desika Paramachariya Swamigal,Saiva Siddhanta — Questions and Answers, Third Edition, 1972, Tharumaiadtinam, Tharumapuram.*
5. *Tholkappiyum, First Edition 2018, Iyal Publication, Thanjavur-01.*
6. *K. M. Nachimuthu, The Noble Thoughts of the Great Siddhars, M.C. Foundations& Lay out, Selvapuram, Coimbatore-26.*
7. *Prof. Pulavar A. Manickam, Tirumandiram — Original Text and Explanation, Volume 2 , Varthaman Pathippagam, Chennai-17*
8. *C. S. Murugesan, Siddhar Songs (Periya Jnana Kovai), Sankar Pathippagam, Chennai-49*

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

## அறிவிப்பு / Announcement

அன்பான தமிழ்ச் சொந்தங்களே

வணக்கம்.
வரும் 2026, ஜனவரி மாதம் வெளிவரும் அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழுக்கான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள் - ஜனவரி 10. அதற்கு பின் வரும் கட்டுரைகள் ஜூலை இதழில் இடம்பெறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

www.aranejournal.com